# ஜநாபிமானி.

## JANABHIMANI.

---

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து, அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு உயர்ந்த மாஸாந்தரத் தமிழ் பத்ரிகை.

வ்யவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள், மாணாக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜநாபிமானி'யை வாங்கிவருகிறார்கள்.

### இதில் ஸாதாரணமாக வெளிவரும் விஷயங்களின் விவரம்.

யுத்த ஸம்பந்தமான விஷயங்கள், வித்யா விஷயம், கல்வி, சாஸ்த்ரம், ஜன ஸமூக விஷயங்கள், வ்யவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில், கோவாபரேஷன், ஸுகாதாரம், பையன்களுக்கான விஷயங்கள், ஸ்த்ரீகளுக்கான விஷயங்கள், உத்தம தேசாபிமானிகளின் ஜீவ்ய சரித்ரங்கள், சிறு நாவல்கள், கதைகள் முதலியவை.

விஷயங்களை விளக்க ஸமயோசிதமான சித்ரப் படங்கள் பல போடப்படும்.

### தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள்நாடு. | வெளிநாடு. |
|---|---|---|
| வர்ஷம் 1-க்கு | 4—0—0 | 6—0—0 |
| 6 மாஸத்திற்கு | 2—0—0 | 3—0—0 |
| தனி ப்ரதி | 0—6—0 | 0—8—0 |

பத்ரிகையை எந்த மாஸம் முதல் வாங்கவேண்டுமென்றாலும் வாங்கலாம்.

**முக்ய அறிவிப்பு.**—எங்கள் ஜநாபிமானி, வெல்த் அப் இண்டியா என்னும் பத்ரிகைகளின் சந்தாதார்களுக்கு, எங்கள் ஸொந்த ப்ரசுரங்களின் விலையில் ரூபாய்க்கு 2 அணா வீதமும், இதர புஸ்தகங்களின் விலையில் ரூபாய்க்கு 1 அணா வீதமும், கழித்துக் கொடுக்கப்படும்.

**ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி.,**
புஸ்தக வ்யாபாரிகள், ஹைகோர்ட்டுக்கு எதிரில்
3, 4, கொண்டிசெட்டித் தெரு, ம,

'ஜநோபிமானி' ப்ரசுரங்கள்—7.

# THE BOND OF THE BRACELET

# வளையல் உடன்பாடு

ஒரு ராஜபுத்ரக் கதை.

ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
ஹைகோர்ட்டுக் கெதிரில்
3, 4, கொண்டிசெட்டித் தெரு, ஜார்ஜ்டவுன்,
மதராஸ்.

காபி ரைட்.] 1918 [விலை அணா 2.

## ‘ஜனோபிமானி’ ப்ரசுரங்கள்.

| | | ரூ.அ.ப. |
|---|---|---|
| 1. | காதல் வெற்றி | ... 0 4 0 |
| | *ஹாஸ்ய ரஸம் பொருந்திய நாவல்.* | |
| 2. | அன்புக்கும் அழிவோ | ... 0 4 0 |
| | *சோக ரஸம் நிரம்பிய நாவல்.* | |
| 3. | பெற்ற மனம் பித்து | ... 0 2 0 |
| | *க்ராமவாழ்க்கையின் இயல்பை விளக்கிக் காட்டும் சிறுகதை.* | |
| 4. | ஹாஸ்ய மஞ்சரி | ... 0 6 0 |
| | *வேடிக்கைக் கதைகளும் குறிப்புகளும் அடங்கியது.* | |
| 5. | ஸலேமீரா | ... 0 2 0 |
| | *ஒரு நீதிக்கதை.* | |
| 6. | தாதாபாய் நௌரோஜியின் ஜீவ்ய சரித்ரம் | ... 0 3 0 |
| 7. | வளையல் உடன்பாடு | ... 0 2 0 |
| | *ஒரு ராஜபுத்ரக் கதை.* | |

---

### விசேஷ ப்ரசுரம்.

ஐரோப்பிய யுத்தம் ... 1 8 0

*யுத்தத்தைப்பற்றிய ஸகல விவரங்களும் அடங்கியது.*

ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,

ஜார்ஜ்டவுன், மதராஸ்.

கவனிப்பு.—*‘ஜனோபிமானி’ ‘வெல்த் அப் இண்டியா’ பத்ரிகைகளின் சந்தாதார்களுக்கு மேற்கண்ட எங்கள் ப்ரசுரங்களின் விலையில் ரூபாய்க்கு 2-அணா வீதம் கழித்துக் கொடுக்கப்படும்.*

# வளையல் உடன்பாடு.

ஒரு காலத்தில் மான்ஸிங் என்னும் ரஜபுத்ர அரசன் வட இந்தியாவிலுள்ள நாகூரில் அரசாட்சி செய்து வந்தான். அவன் மொகலாய சக்ரவர்த்திக்குக் கப்பம் கட்டிய ஒரு சிற்றரசன். ஆகவே, சக்ரவர்த்தி தக்ஷிணத்தில் யுத்தம் செய்ய நேரிட்டபோது, மான்ஸிங் தன்னிடத்திலிருந்த அநேகம் போர்வீரர்களையும் அவர்களுக்குத் தலைவர்களாகத் தன் பிள்ளைகளையும் தக்ஷிணத்திற்கு அனுப்ப நேர்ந்தது. இந்த ஸங்கதியை அறிந்த கூர்ஜ்ஜர அரசனாகிய பெரோஸ் ஷா என்பவன் நாகூரை எதிர்த்துப் பிடித்துக்கொள்ள அதுவே ஸமயமென்று எண்ணி, அதன்மேல் படையெடுத்துப் போனான். மான்ஸிங் அவனை அப்பொழுது எதிர்க்க எவ்விதத்திலும் சக்தியற்றவனாக இருந்தபடியால், தன் குடும்பத்தாரோடும், விலையுயர்ந்த பொருள்களோடும், ப்ரபுக்களோடும், மந்த்ரிகளோடும், சில போர்வீரர்களோடும் காட்வார் என்னும் மலைக்கோட்டைக்கு வந்து சேர்ந்தான். காட்வார் கோட்டைக்குள் ஏராளமான பண்டங்களும் குளங்களும் இருந்தனவென்றாலும், அதை சத்ருவினின்றும் காப்பாற்றப் போதுமான மனிதர்கள் இல்லை.

மான்ஸிங் முதலியவர்கள் காட்வார் கோட்டைக்கு வந்தபிறகு, பெரோஸ் ஷாவின் சேனையும் அங்கே வந்து கோட்டையைச் சூழ்ந்துகொண்டிருந்தது.

மான்ஸிங்கும் அவனைச் சேர்ந்த ப்ரபுக்களும் சத்ருவின்முன் தாங்கள் என்ன செய்வதென்று கோட்டைக்குள் இருக்கும் கொலுமண்டபத்தில் உட்கார்ந்து ஆலோசிக்கத் தொடங்கினார்கள். அக்கம்பக்கத்திலிருந்து உதவி கிடைக்கக் கூடுமானால் அதுவரையில் எதிரியை எதிர்த்துக் கொண்டிருக்கலாம். ஆனால், அம்மாதிரி உதவி செய்யக்கூடியவர்கள் ஒருவருமில்லையென்று அவர்களுக்குத் தோன்றிற்று. ஆகவே, இரண்டில் ஒன்று அவர்கள் செய்யவேண்டியிருந்தது. மஹம்மதிய அரசனுக்குக் கீழ்ப்படியவாவது வேண்டும், உயிரை இழக்கவாவது ஸித்தமாக இருக்கவேண்டும். மஹம்மதியனுக்குக் கீழ்ப்படிவதைவிட இறந்துபோவதே மேலானதென்று தீர்மானித்தார்கள். அக்காலத்தில் ரஜபுத்ரர்களெல்லாம் இம்மாதிரியே நினைத்து வந்தார்கள். ஏனெனில் மஹம்மதிய அரசர்கள் கீழ்ப்படிந்து வருகிறவர்களை கௌரவமாக நடத்துகிற வழக்கமே கிடையாது. ஸ்த்ரீகளைக் கைப்பற்றுவதே அவர்களுடைய முக்யமான நோக்கமாக இருந்தது. அந்த மாதிரி அகௌரவம் உண்டாவதைக் காட்டிலும் உயிரை விடுவது மேலானதென்று மான்ஸிங் முதலியவர்கள் தீர்மானித்தார்கள். கீழ்ப்படிவதாகப் பாசாங்கு செய்துகொண்டே கால தாமஸம் செய்து, தங்களால் ஆனவரையில் சத்ருக்களை

32153

எதிர்த்து, கடைசியாக ஜோஹார் என்னும் வழக்கப்படி தீமூட்டி தங்கள் மனைவி மக்களையும் பொருள்களையும் அதில் எரித்துவிட்டு சண்டைசெய்து உயிரை விடுவதாக முடிவு செய்துகொண்டார்கள்.

ஆலோசனை முடிந்ததும் அவரவர்கள் தங்கள் தங்கள் விடுதிகளுக்குப் போனார்கள். அவர்கள் என்ன முடிவுசெய்தார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள ஸ்த்ரீகளும் சிறுவர்களும் வெகு ஆவலோடு காத்திருந்தார்கள். இறக்கவேண்டிய செய்தியைக்கேட்டுச் சிலர் ஸந்தோஷித்தார்கள்; இன்னும் சிலர் துக்கித்தார்கள். மான்ஸிங்கின் கடைசி மகளாகிய பன்னு என்பவளும் அவளோடிருந்தவர்களும் அரசனுடைய வரவை ஆவலோடு எதிர்பார்த்திருந்தார்கள். ரஜபுத்ரர்கள் தங்கள் பெண்களினால் தங்களுக்குக் கவலையும் கஷ்டமும் உண்டாவதன்றி ஸுகம் உண்டாவதில்லையென்று எண்ணினபோதிலும், மான்ஸிங் தன் மகள் விஷயத்தில் அந்த மாதிரி நினைக்கவில்லை. அவளுடைய தாயார் பதினைந்து வர்ஷங்களுக்கு முன்னமே காலஞ்சென்றுவிட்டாள். பன்னு குணத்திலும், ரூபத்திலும், நுண்ணறிவிலும் சிறந்தவள். அவள் தன் ஸம்ஸாரத்தின் சாயலாகவே இருந்தபடியால், மான்ஸிங்குக்கு மற்றெல்லாக் குழந்தைகளிடத்தில் காட்டிலும் அவளிடம் அதிக விச்வாஸம் உண்டாயிருந்தது. ராஜாங்க விஷயங்களினால் அவனுக்கு எவ்விதமான துன்பமாவது கவலையாவது உண்டானால், அது அவன் பன்னுவைப் பார்த்த மாத்ரத்தில் அப்பால் போய்விடும். மேலே

ஆலோசித்து முடிவுசெய்த விஷயத்தை அவளிடம் எப்படித் தெரிவிப்பதென்று அரசன் மிகவும் மனங் கலங்கினான். ஆகவே அவன் தன் குடும்பத்தாருடன் ஒன்றும் சொல்லாமல் மௌனமாக இருந்தான். அவனைப் பார்த்து அவர்கள் கண்ணீர்விட்டுக் கலங்கினார்கள். பன்னா இனிய குரலுடன் தன் தந்தையை விசாரிக்கத் தொடங்கினாள். மான்ஸிங் ஒருவாறு தைர்யங்கொண்டு எல்லாரும் இறக்கவேண்டியது அவச்யமென்பதைத் தெரிவித்தான்.

பன்னா மற்றவர்களைப்போல் வருத்தமும் ஆச்சர்யமும் அடையாமல், தந்தை சொன்ன விஷயத்தைப் பற்றி ஆலோசித்துக்கொண்டே, தன் அறையிலுள்ள ஜன்னலில் போய் உட்கார்ந்தாள். அந்த ஜன்னலின் வழியாகப் பார்த்தால், எதிரே அரிகண்டா என்னும் மலை நன்றாகத் தெரியும். அவள் ஏதோ சிந்தித்துக் கொண்டே அந்த மலையைப் பார்த்தாள். திடீரென்று அவள் மனதில் ஒரு தைர்யம் பிறந்தது. அரிகண்டா மலையின் சிகரத்தில் உமத்ஸிங் என்னும் யௌவன ரஜபுத்ர வீரனொருவன் வஸித்து வந்தான். அவன் அழகிலும் பராக்ரமத்திலும் மிகவும் சிறந்தவன். அதற்கு இரண்டு வர்ஷத்திற்கு முன், மான்ஸிங்கைச் சில கள்ளக் கூட்டக்காரர்கள் எதிர்த்தபோது, உமத்ஸிங் தைர்யத்தோடு சென்று போர்புரிந்து அவர்களைத் தோற்கடித்தான். அவன் ஜயமடைந்தவுடன் நாகூரின் வழியாக வந்துகொண்டிருந்தான். அப்பொழுது பன்னா அவனைப்பார்த்து அவன்மேல் அளவில்

லாத காதல் கொண்டாள். தான் அம்மாதிரியான வீரனையே மணம்புரிந்து கொள்ளவேண்டுமென்று தீர்மானித்தாள். உமத்ஸிங் ரஜபுத்ரவீரனாக இருந்ததோடு அவன் தன் தகப்பனுக்கு உதவி செய்தவனாகவும் இருந்தபடியால், அவனை விவாஹம் செய்துகொள்வதில் தடை ஏற்படாதென்று கருதினாள். ஆனால் கொஞ்சகாலத்திற் கெல்லாம் மான்ஸிங்குக்கும் உமத்ஸிங்குக்கும் விரோதம் உண்டாயிற்று. இருவருடைய *ஊர்களுக்கும் இடையிலுள்ள ப்ரதேசத்தைப்பற்றி அவர்களுக்குள் மனஸ்தாபம் நேரிட்டது. அந்த ப்ரதேசம் தனக்குததான் உரியதென்று ஒவ்வொருவரும் சொல்லிக்கொண்டார்கள். அவ்விருவருக்கும் விரோதம்உண்டாகியும் பன்னு உமத்ஸிங்கினிடம கொண்ட காதலை ஒழிக்கவில்லை. அவள் பல தடவைகளில் ஜன்னலில் உட்கார்ந்துகொண்டு, தன் மனஸுக்குரிய வீரன் வஸித்துவந்த அரிகண்டா மலையை உற்று நோக்கினபடி இருப்பாள். அப்படியே இப்பொழுதும் அவள் அதைப் பார்த்துக்கொண்டிருந்தாள். தன் தகப்பனுருக்கு உதவி புரியும்படி உமத்ஸிங்கை ஏன் வேண்டிக்கொள்ளக் கூடாதென்று அவளுக்குத்தோன்றிற்று. ரஜபுத்ரர்களுக்குள் ஒருஸ்த்ரீ தனக்கு ஆபத்து நேரிடுங் காலத்தில், தான் அணிந்துகொண்டிருக்கும் வளையலை ஒரு போர்வீரனுக்கு அனுப்பி அவன் அதை ஏற்றுக்கொண்டால், ஆபத்தினின்றும் அவளைக் காப்பாற்ற அவன் *கடமைப்பட்டவனாவான் என்று ஒரு வழக்கம் உண்டு. வர்ஷத்திற்கு ஒரு முறை வளையல்

பண்டிகை என்று அவர்கள் கொண்டாடுவார்கள். சில ஸமயங்களில் ரஜபுத்ர ஸ்த்ரீகள் மஹம்மதிய வீரர்களையும் தங்களைக் காப்பாற்றும்படி வளையலை அனுப்பி வேண்டுவார்கள். உதவி புரிய ஸம்மதிக்கும் வீரன் வளையலைப் பெற்றுக்கொண்டு, தன் ஸம்மதத்தைத் தெரிவிக்கும் பொருட்டு, ஒரு சித்ரப் பட்டாடையை அனுப்புவான். இம்மாதிரியாக இருவருக்கும் ஏற்படும் உடன்பாடு வளையல் உடன்பாடு என்று சொல்லப்படும். காப்பாற்றும் வீரனும் காப்பாற்றப்படும் ஸ்த்ரீயும் ஸஹோதரனும் ஸஹோதரியுமென்று பாவித்துக் கொள்வார்கள். தன் தகப்பனுக்கும் உமத்ஸிங்குக்கும் நேரிட்டிருந்த விரோதம் மிகவும் அற்பமானதாக இருந்தபடியாலும், யாவரும் வியக்கும் அழகுவாய்ந்த தன் வளையலை உமத்ஸிங் ஸந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டு உதவி புரிய வருவானென்று பன்னு எண்ணியிருந்த படியாலும், அவள் வளையல் உடன்பாடு செய்துகொள்வதே உத்தமமென்று தீர்மானித்தாள்.

பன்னு உடனே அவ்விடம்விட்டு தன் தகப்பனிடம்போய் அவரைத் தனியாக தன் அறைக்குள் அழைத்துவந்தாள். அவள் அவரைப் பார்த்து, "தந்தையே! அரிகண்டாவில் இருக்கும் உமத்ஸிங் தங்களுக்கு அதிகக் கெடுதி செய்ததுண்டோ? தங்களை அவர் கேவலமாக நடத்தியதுண்டோ?" என்று கேட்டாள். மான்ஸிங் "குழந்தாய், அவன் அவ்வாறு ஒன்றும் செய்ததில்லை. என் பாட்டனார் நாள் முதல் விவாதத்திலிருக்கும் ப்ரதேசம் தனக்கே

3257



சேரவேண்டுமென்று கேட்கிறான். அந்த ப்ரதேசம் வளப்பமற்ற மணற் பாங்கான நிலம். ஆராய்ந்து பார்த்தால் அது உமத் ஸிங்குக்கே சேரவேண்டியதென்று தோன்றுகிறது. ஆயினும், என் முன்னோர் தங்களுக்குச் சேரவேண்டுமென்று சண்டையிட்டுக்கொண்டிருந்தபடியால், நானும் அதைக் கைப்பற்ற முயல்வது அவச்யமாக இருக்கிறது. உன் ஸகோதரர்கள் தக்ஷிணத்திலிருந்து திரும்பி வந்தவுடன் உமத்ஸிங்கோடு சண்டைசெய்து அதைப் பெறவேண்டுமென்று எண்ணி இருக்கிறேன். மற்றப்படி உமத்ஸிங்கின் குணத்திலாவது நடவடிக்கையிலாவது குற்றம் கண்டுபிடிக்க ஒன்றும் இல்லை. அவன் கள்ளக் கூட்டக்காரர்களோடு போர்செய்து அவர்களைத் தோற்கடித்து எனக்கு உதவி புரிந்திருக்கிறான். அந்தவிஷயத்தில் அவனிடம் எனக்கு அதிக விச்வாஸந்தான். நீ இப்பொழுது அவனைப்பற்றி ஏன் கேட்கிறாய்?" என்று கேட்டான். பன்னு தான் உமத்ஸிங்கோடு வளையல் உடன்பாடு செய்துகொள்ள யோசித்திருப்பதை அவனிடம் தெரிவித்தாள். அதைக் கேட்டவுடன் மான்ஸிங் கோபங்கொண்டு "என்ன அறிவீனமாய் யோசனை செய்தாய்? எவ்வளவு ஆபத்து நேர்ந்தபோதிலும், நம்முடைய சத்ருவையா வணங்கி உபகாரம் செய்ய வேண்டிக்கொள்வது? ராஜபுத்ர வீரத்திற்கு இது ஏற்றதாகுமா? தைரியமாய் சண்டைசெய்து மாண்டுபோவதல்லாமல், உமத்ஸிங்கின் உதவியைக்கனவிலும் நாடமாட்டேன்" என்று சொன்னான்.

ஆனால் எவ்வளவு கோபம் உண்டாகிய போதி லும் அதைத் தணிக்கும் சக்தி பன்னுவிடம் இருந்த படியால், இப்பொழுதும் அவள் தன் தந்தையின் கோபத்தை மெதுவாக ஆற்றினாள். உமதஸிங் எவ் விதத்திலும் அவருக்கு தீங்கு செய்தவனில்லையாத லால் அவனுடைய உதவியை நாடுவது இழிவாகா தென்றும், அவன் விரோதம் பாராட்டாமல் ஸமயத் தில் உதவிசெய்யக் கூடியவனென்றும், மஹம்மதி யர்களிடம் அவமானம் அடைவதைவிட, இப்படிப் பட்ட வீரனுடைய உதவியால் அவர்களை வெல்லுவது கௌரவமானதென்றும் அவள் எடுத்துச் சொல்லவே, மானஸிங் வளையல் உடன்பாட்டிற்கு ஒத்துக்கொண் டான். மேலும், நாகூரை மஹம்மதியர் ஜயித்தால், பிறகு அரிகண்டாவையும் பிடிக்க முயலுவார்களாகை யால், இப்பொழுது மானஸிங் தங்களுக்கு உதவி செய்யவந்து மஹம்மதியரைத் தோற்கடித்தால்தான் தன் ராஜ்யத்தைக் காப்பாற்றலாமென்று உமதஸிங் கருதுவானென்றும் அவர்கள் எண்ணினார்கள். ஆகவே, பன்னுவின் கல்விழைத்த வளையலை பாணன் என்னும் சிறுவனிடம் கொடுத்து அரிகண்டாவுக்கு அனுப்புவதென்று தகப்பனும் மகளும் தீர்மானம் செய்துகொண்டார்கள்.

காட்வார் கோட்டையை மஹம்மதியர்கள் முற் றுகை போட்டுக்கொண்டிருந்தார்களாகையால், பாண னை வெளியில் சூழ்ந்துகொண்டிருந்த மஹம்மதியர் களுக்குத் தெரியாமல் அனுப்பவேண்டி யிருந்தது.

ஆகவே, இரவில் அவனை ஒரு கயிற்றில் கட்டித் தூக்கி வெளிப்பக்கத்தில் இறக்கினார்கள். பாணன் வயஸில் சிறியவனாக இருந்தபோதிலும், மிகுந்த தைர்யசாலி. அவன் கயிற்றை அவிழ்த்துக் கொண்டு, மஹம்மதியர்களின் கூடாரங்களுக்கு அருகாமையில் போகாமல், பாறைகளின் மறைவிலேயே போக ஆரம்பித்தான். மஹம்மதியர்கள் தங்கள் கூடாரங்களுக் கெதிரில் வெளிச்சம் வைத்துக் கொண்டிருந்தபடியால் அவன் அவர்கள் கண்களில் படாமல் வெகு ஜாக்ரதையாகப் போகவேண்டி யிருந்தது. இரவு இருட்டாக இருந்த போதிலும், பாணன் அந்த வழியில் போய்ப் பழகிய வனாதலால், நக்ஷத்ரங்களின் வெளிச்சத்திலேயே வழியைக் கண்டுபிடித்துப் போய்க்கொண்டிருந்தான். அவன் கூடாரங்களையெல்லாம் தாண்டிய பிறகு, இனி சத்ரு பயம் இல்லையென்று எண்ணிக் கொஞ்சம் அஜாக்ரதையாகப் போக ஆரம்பித்தான். அப்படிப் போகும்போது, ஒரு புதரின் மறைவிலிருந்த மஹம்மதிய வீரனொருவன் அவன்மேல் பாய்ந்து அவனைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். பாணன் மிக்க பலமுள்ளவனென்றாலும், அந்தப் போர்வீரன் அவனைவிடப் பெரியவனானபடியால், தப்பித்துக்கொண்டு போக முடியவில்லை. அந்தப் போர்வீரன் பாணனை கூர்ஜ்ஜர அரசனுடைய கூடாரத்தை நோக்கி அழைத்துப் போனான்.

பாணன் பார்வைக்குச் சிறியவனாக இருந்தபடியாலும், தப்பித்துக்கொள்ள ப்ரயத்னப் படாமலிருந்

தபடியாலும், போர்வீரனுக்கு அவன்மேல் ஸந்தேகம் உண்டாகவில்லை. ஆகவே அவன் பாணனுடைய வலது கையை மாத்ரம் பிடித்துக்கொண்டு அழைத்துக் கொண்டுபோனான். சிறிதுதூரம் போனதும், பாணன் மெதுவாகத் தன் இடது கையால் சட்டைக்குள் மறைத்து வைத்திருந்த பிச்வாவை எடுத்துக் கொண்டான். உடனே அவன் அதை ஸரியாகப் பிடித்துக் கொண்டு போர்வீரனை அதனால் குத்திவிட்டு ஓட ஆரம்பித்தான். போர்வீரனுக்கு மிகுந்த காயம் உண்டாயிற்றென்றாலும், பாணனைத் துரத்திக்கொண்டு ஓடினான்.

பாணன் போர்வீரனிடமிருந்து தப்பித்துக் கொண்டபோது அவன் தலைக்குட்டை கீழேவிழுந்து விட்டது. அந்தத் தலைக்குட்டையில்தான் அவன் பன்னு கொடுத்தனுப்பிய வளையலை மறைத்து வைத்திருந்தான். ஆகவே, அவன் திரும்பவும் அந்த இடத்திற்குப் போகவேண்டியதாயிற்று. அவனைப் பின் தொடர்ந்து வந்த போர்வீரன் சற்றே பின் தங்கி விட்டபடியால், அதுவே நல்ல ஸமயமென்று பாணன் ஓரிடத்தில் மறைந்து கொண்டான். பிறகு அவன் தலைக்குட்டை விழுந்திருந்த இடத்திற்குப் போய் அதை எடுத்துக் கொண்டான். வளையலும் அதிலேயே இருந்தது.

பாணன் தலைக்குட்டையை எடுத்துக்கொண்டு திரும்பி வருகையில், குத்துண்ட போர்வீரன்போட்ட கூச்சலினால் காடெல்லாம் கலவரமாக இருந்தது.

குத்தியவனைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று அநேக போர்வீரர்கள் வெளிச்சத்துடன் அங்கு மிங்கும் அலைந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்குத் தலைவனான ஒருவன் குதிரைமேல் ஏறிக்கொண்டு 'இங்கே பாருங்கள், அங்கே பாருங்கள்' என்று போர்வீரர்களுக்குக் கட்டளை இட்டுக்கொண்டு அலைந்து திரிந்தான். குதிரையின்மேல் ஏறிக்கொண்டு காட்டில் போவது ஸங்கடமாக இருந்தபடியால், அவன் குதிரையை விட்டிறங்கி, அதை ஒரு பையன் வசம் விட்டுவிட்டு நடந்துபோக ஆரம்பித்தான். இதையெல்லாம் சற்று தூரத்திலிருந்து பார்த்திருந்த பாணன் மெதுவாக அந்தப் பையனிடம் வந்தான். குதிரை அந்தப் பையனுக்கு அடங்காமல் இழுத்துக் கொண்டிருந்தபடியால், அவன் அதைப் பிடித்திருக்கும்படி பாணனை வேண்டிக்கொண்டான். பாணன் ஸந்தோஷத்துடன் குதிரையைப் பிடித்துக்கொள்ளவும், அந்தப் பையன் அருகாமையிலிருந்த பாறையின்மேல் உட்கார்ந்துகொண்டான். பாணன் குதிரையைத் தட்டிக்கொடுத்து மெதுவாக அதன்மேல் ஏறிக்கொண்டு அரிகண்டாவை நோக்கி ஸவாரிவிடத் தொடங்கினான். அப்பொழுது சந்த்ரன் உதயமாய் விட்டபடியால் பாணன் போவதற்கு மிகவும் ஸௌகர்யமாக இருந்தது. அதைப் பார்த்திருந்த பையன் குய்யோ முறையோ வென்று கூச்சலிட்டான். உடனே அநேக போர்வீரர்கள் குதிரைகளின்மேல் ஏறிக்கொண்டு அவனைப் பின்தொடர்ந்தார்கள். ஆனால் பாணன்

ஏறிப்போன குதிரை அதிவேகமாகச் சென்றபடியால், அவர்களால் அவனைப் பிடிக்க முடியவில்லை. பாணன் மிகவும் வேகமாகச் சென்று ஸூர்யோதயமாவதற்குள் அரிகண்டாவை அடைந்தான்.

பாணன் அரிகண்டாக் கோட்டைக்குள் போனபோது உமத்ஸிங்கும் அவன் ஸ்நேகனான ஸலிம்ஸிங்கும் வேட்டைக்குப் போகத் தயாராக இருந்தார்கள். பாணன் உமத் ஸிங்கினிடம் பன்னாவின் வளையலை கொடுத்து, அவள் வேண்டுகோளை வெளியிட்டான். மிகவும் அழகுடையவளான பன்னா வளையலைத்தனக்கு அனுப்பியதே உமத்ஸிங்குக்குப் பெரு மகிழ்ச்சியை உண்டுபண்ணியது. உமத்ஸிங் காட்வாருக்குப் போகவேண்டிய ஸங்கதியைத் தன் நேசனுக்குத் தெரிவித்து தான் வேட்டைக்கு வர முடியாதென்று சொன்னான். ஸலிம் ஸிங்கும் தன் போர்வீரர்களோடு காட்வாருக்கு வருவதாகத் தெரிவித்தான். ஆகவே இரண்டு ஸ்நேகிதர்களும் காட்வாருக்குப் போகத் தீர்மானித்தார்கள்.

இதற்குள்ளாக பெரோஸ் ஷா காட்வார் கோட்டையைத் தாக்க ஆரம்பித்தான். பாணன் அரிகண்டாவுக்கு வந்த அன்று காலையிலேயே மஹம்மதியர்கள் காட்வார் கோட்டைக்குள் சுவர்களின்மேல் ஏறிச் செல்ல முயன்றார்கள். நம்பிக்கை த்ரோகியான ரஜபுத்ரனொருவன் அவர்களுக்கு வழி காண்பித்து, உள்ளே தந்த்ரமாய்க்கொண்டு போவதாக ஒத்துக்கொண்டான். அவன் பாறைகளின்மேல் ஏறிப்

போய் சுவரின் உச்சியை யடைந்து மஹம்மதியர்கள் ஏறி வருவதற்காக அங்கிருந்து ஒரு நூலேணியைக் கீழே விட்டான். அந்த நூலேணியில் ஒருவன் காலை வைத்து ஏறும் ஸமயத்தில், கோட்டைக்குள் இருந்த ரஜபுத்ர வீரர்கள் நம்பிக்கை த்ரோகியான ரஜபுத்ரன் தலையை வெட்டி வெளியே எறிந்தார்கள். அவன் கட்டிய நூலேணியையும் அறுத்து விட்டார்கள். இதைக் கண்ட மஹம்மதியர்கள் பயந்து தங்கள் பீரங்கிகள் வந்துசேரும் வரையில், கோட்டைக்குள் போகக்கூடாதென்று வெளியே நின்றுவிட்டார்கள்.

மறுநாள் வெளியிலிருந்த மஹம்மதியர்கள் கோட்டைச் சுவர்களை இடிப்பதற்காக பள்ளங்களை வெட்டிக்கொண்டும், மருந்து முதலியவைகளை வைத்தும் செய்துகொண்டும், இருந்தார்கள். அன்றிரவு அரிகண்டாவுக்குப் போயிருந்த பாணன் உமத்ஸிங் கொடுத்தனுப்பிய சித்ரப் பட்டாடையை எடுத்துக்கொண்டு வந்து, ஒருவருக்கும் தெரியாமல் சுவரின்மேல் ஏறிக் கோட்டைக்குள் போய், அதைப் பன்னாவிடம் கொடுத்து, நடந்த ஸங்கதியைத் தெரிவித்தான. உமத்ஸிங்கோடு ஸலிம் ஸிங்கும் உதவிக்கு வருவதை யறிந்து எல்லாரும் ஸந்தோஷ மடைந்தார்கள்.

உமத்ஸிங்கும் ஸலிம் ஸிங்கும் ஐயாயிரம் போர்வீரர்களோடு காட்வாரை நோக்கி வந்தார்கள். மஹம்மதியர்களின் சேனை மிகப்பெரியதாக இருந்தபடியால், தாங்களாகச் சத்ருக்களை எதிர்த்துப் போர்செய்யக் கூடாதென்று கருதி, ஸமயம் வரும்போது அவர்களை

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,

எதிர்க்கலாமென்று எண்ணத்துடன், அவர்கள் இருந்த இடத்திற்குக் கொஞ்ச தூரத்தில் காத்திருந்தார்கள். இப்படியிருக்கையில் மஹம்மதியரின் பீரங்கிகள் வந்து கொண்டிருக்கும் ஸங்கதியை ரஜபுத்ர வீரனொருவன் அவர்களிடம் வந்து தெரிவித்தான். உமத்ஸிங் உடனே 2000 வீரர்களோடு அந்த திக்கை நோக்கிச் சென்றான். பீரங்கிகளோடு வந்த போர்த்துகேசிய வீரர்கள் மிகவும் கொஞ்சமாகையால், ரஜபுத்ரர்கள் அவர்களை வெகு சீக்ரத்தில் தோற்கடித்து பீரங்கிகளைக் கைப்பற்றி அவர்களையும் தங்கள் வசத்தில் வைத்துக்கொண்டார்கள். முன்பின் அனுபோகமில்லாமல் பீரங்கிகளை உபயோகித்தால் தங்களுக்குக் கெடுதியாக முடியுமென்று எண்ணி உமத்ஸிங் அவைகளை ஒரு குளத்தில் எறிந்துவிடும்படி கட்டளையிட்டான். பிறகு அவன் தன் போர்வீரர்களோடும் கைது செய்யப்பட்ட போர்த்துகேசிய வீரர்களோடும் முன்னிருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தான்.

எதிர்பார்த்திருந்த பீரங்கிகளை ரஜபுத்ரர்கள் கைப்பற்றி விடவே, இனி தாங்கள் எப்படி ஜயிப்பதென்று பெரோஸ் ஷாவும் அவனைச் சேர்ந்தவர்களும் பயப்பட ஆரம்பித்தார்கள். மேலும், சத்ருக்கள் தங்களுக்கு வெளிப்புறத்திலும் தங்கியிருந்தபடியால், கூர்ஜரத்திலிருந்து போர்வீரர்களாவது ஸாமான்களாவது வருவதைத் தடைசெய்து விடுவார்களென்று அவர்கள் கலங்கினார்கள். பீரங்கிகளை ரஜபுத்ரர்கள் எடுத்துக்கொண்டார்கள் என்பதை அறிந்த

வேறு ராஜபுத்ரர்கள் வெகு ஸந்தோஷப்பட்டார்கள். அது வரையில் வரலாமா வரக்கூடாதாவென்று யோசித்துக்கொண்டிருந்த ராஜபுத்ரத் தலைவர்களும் அப்பொழுது காட்வாருக்கு தங்கள் ஸைன்யங்களுடன் வந்து கூடினார்கள். நாகூரிலிருந்த கிழவர்களும் சிறுவர்களுங்கூட காட்வாருக்கு வந்து சேர்ந்தார்கள்.

உணவுப் பொருள்கள் கூர்ஜ்ஜரத்திலிருந்து வருவது அஸாத்யமாக இருந்தபடியால், பெரோஸ்ஷா காட்வார் கோட்டைக்குள் சென்று, அங்குள்ள ஸாமான்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தான். ஆகவே அவன் பள்ளங்களில் மருந்தை நிரப்பி வெடிக்கச் செய்து சுவர்களை இடிக்க முயன்றான். வெடிசப்தம் கேட்டவுடன் வெளிப்புறத்திலிருந்த உமத்ஸிங் முதலியோர் மஹம்மதியர்கள் இருக்குமிடத்திற்கு வந்து எதிர்த்தார்கள். வெளிப்புறத்திலும் கோட்டைக்கு உள்புறத்திலும் ராஜபுத்ரர்கள் எதிர்த்தால் தோல்வியடைய நேரிடுமென்று பயந்து, பெரோஸ்ஷா சில வீரர்களைக் கோட்டையண்டை விட்டு உமத்ஸிங் முதலியோரை எதிர்ப்பதற்காக அநேக போர்வீரர்களுடன் வந்தான். இரு தரத்தாருக்கும் வெளிப்புறத்தில் சண்டை நடக்கவே மஹம்மதியர்கள் கோட்டைக்குள் செல்ல முடியாமல் போயிற்று. நடந்த சண்டையில் ஒருவரும் ஜயமடையவில்லை.

வெளிப்புறத்தில் இருக்கும் ராஜபுத்ரர்களைத் தோற்கடித்து விட்டால், எளிதில் கோட்டைக்குள்

ப்ரவேசிக்கலாமென்று பெரோஸ்ஷா எண்ணினான். ஆகவே அவன் மறுநாள் காலையில் அநேகம் போர் வீரர்களோடு உமத்ஸிங்கை எதிர்த்து வந்தான். எதிருக்கெதிராக நின்று சண்டைசெய்தால் தோல் வியுண்டாகுமென்றறிந்த உமத்ஸிங் மஹம்மதிய சேனை எதிரே வரவரத் தன் சேனையைப் பின்னுக் குக் கொண்டுபோய்க் கொண்டே இருந்தான். காட் வாருக்கு வெகுதூரத்தில் சென்றவுடன் ரஜபுத்ரர்கள் திடீரென்று எதிர்த்துச் சண்டை செய்தார்கள். இரு வர் சேனைகளிலும் அநேகம் போர்வீரர்கள் மடிந்து போனார்கள்.

இப்படி யுத்தம் நடந்து கொண்டிருக்கையில், உமத்ஸிங் ஆயிரம் போர்வீரர்களுடன் காட்வார் கோட்டைக்குச் சென்று அங்கிருந்த மஹம்மதியர் களை எதிர்த்து, கோட்டைக்குள் போய்விட்டான். அவனோடு மஹம்மதியரிடமிருந்து பிடித்துப் போன குதிரையின் மேல் ஏறிக்கொண்டு பாணனும் அங்கே போனான். மான்ஸிங் முதலியோர் அந்த இரண்டு பேரையும் ஸந்தோஷத்தோடு வரவேற்றார்கள். வெளி யிலிருந்த ரஜபுத்ரர்களை பெரோஸ்ஷா தோற்கடித்தும் ப்ரயோஜனமில்லாமல் போயிற்று. கோட்டைக்குள் ஸைன்ய பலம் அதிகரித்து விட்டபடியாலும், கூர்ஜ ஜரத்திலிருந்து வரும் ஸாமான்களைத் தடுக்க வெளி யில் ரஜபுத்ரர்கள் இருந்தபடியாலும், தனக்கு ஜயமுண் டாகாதென்று, பெரோஸ்ஷா அறிந்து கொண்டான். ஆகவே அவன் தன் ஸைன்யங்கள் போகும்போது

யாதொரு தீங்கும் செய்யாமலிருப்பதாக வாக்களித்தால் முற்றுகையை விட்டுவிட்டுப் போய்விடுவதாக உமத்ஸிங்கினிடம் *தெரிவித்தான். இருவரும் அம்மாதிரியே உடன்படிக்கை செய்து கொண்டார்கள். சீக்ரத்தில் மஹம்மதியர்கள் கூர்ஜ்ஜரத்துக்குப் போய்விட்டார்கள்.

மஹம்மதியர்கள் திரும்பிப்போவதைப் பார்த்த ரஜபுத்ரர்கள் ஆனந்த ஸாகரத்தில் •மூழ்கினார்கள். உமத்ஸிங்கே தன்னைக் காப்பாற்றியவனென்று புகழ்ந்து, மான்ஸிங் அவனை நோக்கி "ஆண் சிங்கமே! உன்னாலன்றோ நானும் என் மக்களும் இப்பொழுது உயிர் பிழைத்திருக்கிறோம்! நீ இந்த ஸமயத்தில் வந்து உதவி புரிந்து கௌரவப்படுத்தியதற்காக நான் என்ன பதிலுபகாரம் செய்யப்போகிறேன்? ஆயினும் என்னிடமிருந்து நீ எதையாவது பெற்றுக்கொண்டால் தான் என் மனம் த்ருப்தியடையும். இந்த காட்வார் கோட்டையையோ என் மகுடத்திலுள்ள விலையுயர்ந்த ரத்நங்களையோ, வேறு எதையோ, எதை கேட்டாலும் கொடுக்க ஸித்தமாக இருக்கிறேன்" என்றான். உமத்ஸிங் வெகு ஸந்தோஷத்தோடு அவனைப்பார்த்து "அரசே! உங்கள் வாக்குதத்தத்தின் படியே உங்கள் ராஜ்யத்திலும் அரண்மனையிலும் விலையற்றதாக இருக்கும் மாணிக்கத்தைக் கேட்கிறேன்" என்றான். தன் மகுடத்திலிருக்கும் விலையற்ற மாணிக்கத்தைக் கேட்டானென்று எண்ணி, மான்ஸிங் ஸந்தோஷத்தோடு ஆசீர்வதித்து அதைக்கொடுக்கப் போனான்.

ஆனால் மாணிக்கம் என்று அர்த்தமாகும் பன்னாவையே தான் கேட்டதாக உமத்ஸிங் அவனிடம் தெரிவித்தான். மான்ஸிங் மனமகிழ்ந்து தன் மகளை அவனுக்குக் கொடுக்க ஸம்மதித்தான்.

நல்ல சுபதினத்தில் இருவருக்கும் நாகூரில் கல்யாணம் நடந்தேறியது. அநேக ராஜபுத்ரர்கள் விவாகத்திற்கு வந்து அவர்களை ஆசீர்வதித்தார்கள். வளையல் உடன்பாட்டினால் ஸஹோதரன் ஸஹோதரியாக இருந்தவர்கள் உடன்பாடு முடிந்தபிறகு, நாயகனும் நாயகியுமாகி ஸந்தோஷத்துடன் வெகுகாலம் வாழ்ந்து வந்தார்கள்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY



THOMPSON AND CO., PRINTERS, MADRAS.

# சில நல்ல நாவல்கள்.

| | | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|
| 137. | விஜய ஸுந்தரம் | ... | 2 | 0 | 0 |
| 140. | கமலாக்ஷி | ... | 1 | 8 | 0 |
| 349. | பத்மாவதி | ... | 1 | 4 | 0 |
| 347. | ஷை காலிகோ | ... | 1 | 8 | 0 |
| 92. | அம்ருத ஸஞ்சீவினி என்னும் டாலிஸ்மன் | | 1 | 2 | 0 |
| 838. | ஷண்முகஸுந்தரம் | ... | 1 | 0 | 0 |
| 865. | ஹேமலதை | ... | 1 | 4 | 0 |
| 41. | தானவன் | ... | 0 | 12 | 0 |
| 388. | பத்மினி | ... | 0 | 12 | 0 |
| 487. | விஜயகாருண்யம் | ... | 0 | 12 | 0 |
| 549. | அனுமான்ஸிங் | ... | 0 | 12 | 0 |
| 171. | முரளீதரன் | ... | 0 | 10 | 0 |
| 243. | கல்யாணி | ... | 0 | 10 | 0 |
| 535. | மதிவாணன் | ... | 0 | 12 | 0 |
| 39. | கோமளம் குமரியானது | ... | 0 | 8 | 0 |
| 125. | காமாக்ஷி அல்லது ஓர் கைம்பெண்ணின் கதி | ... | 0 | 8 | 0 |
| 260. | ராஜாமணி | ... | 0 | 8 | 0 |
| 26. | தலையணை மந்திரோபதேசம் | ... | 0 | 8 | 0 |
| 268. | தர்மாம்பாள் 1-ம்பாகம் | ... | 0 | 8 | 0 |
| | ,, 2-ம்பாகம் | ... | 0 | 10 | 0 |
| 461. | ஹாஸ்யமஞ்சரி | ... | 0 | 6 | 0 |
| 725. | பீமலா அல்லது திவான் மகன் | ... | 0 | 6 | 0 |
| 42. | தீனதயாளு | ... | 0 | 6 | 0 |
| 95. | கள்வர் கவர்ந்த கல்யாணப்பெண் | ... | 0 | 6 | 0 |
| 410. | காதல்வெற்றி | ... | 0 | 4 | 0 |
| 711. | அன்புக்கும் அழிவோ | ... | 0 | 4 | 0 |
| 854. | பெற்றமனம் பித்து | ... | 0 | 2 | 0 |
| 901. | ஸமீரா | ... | 0 | 2 | 0 |

## தமிழ் நாடகங்கள்.

| | | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|
| 30. | ஹரிச்சந்த்ரன் புது முறைப்படி | ... | 5 | 0 | 0 |
| 697. | ஷை புராணப்படி | ... | 2 | 8 | 0 |
| 720. | போஜசரித்திரம் | ... | 2 | 8 | 0 |
| 686. | பாதுகா பட்டாபிஷேகம் | ... | 1 | 8 | 0 |
| 685. | சீதாகல்யாணம் | ... | 1 | 8 | 0 |
| 179. | கலாவதி | ... | 1 | 8 | 0 |
| 676. | ஸகுந்தலை அல்லது காணாமல்போன கணையாழி | ... | 1 | 8 | 0 |
| 10. | ரூபாவதி | ... | 1 | 0 | 0 |
| 302. | கண்ணகி | ... | 0 | 14 | 0 |
| 56. | லீலாவதி ஸுலோசனை | ... | 0 | 12 | 0 |
| 181. | புஷ்பவல்லி | ... | 0 | 12 | 0 |
| 55. | சத்ருஜித் | ... | 0 | 12 | 0 |
| 758. | விஜயரங்கம் | ... | 0 | 12 | 0 |
| 855. | நந்தனார் | ... | 0 | 12 | 0 |
| 754. | தெய்வமணி அல்லது காதலர் கபடம் | ... | 0 | 12 | 0 |
| 128. | ஹரிச்சந்த்ரன் | ... | 0 | 10 | 0 |
| 136. | வாஸந்திகை | ... | 0 | 8 | 0 |
| 856. | காந்தாமணி | ... | 0 | 8 | 0 |
| 158. | ரஜபுத்ரவீரன் | ... | 0 | 8 | 0 |
| 363. | கீசகன் அல்லது கற்பின் வெற்றி | ... | 0 | 8 | 0 |
| 155. | முற்பகல் செய்யில் பிற்பகல் விளையும் | ... | 0 | 8 | 0 |
| 791. | பிரஹஸனங்கள் | ... | 0 | 8 | 0 |
| 667. | ஸுதர்ம கலாவதீயம் | ... | 0 | 6 | 0 |
| 867. | ஸத்ய ஹரிச்சந்த்ரன் | ... | 0 | 6 | 0 |

## புராண இதிகாஸங்கள்.

716. பாகவதம் க்ரந்த ச்லோகங்களும் தமிழ் மொழி பெயர்ப்பும் கொண்டது.

| | | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|
| 1-ம் பாகம் | 1-4 ஸ்கந்தங்கள் | ... | 6 | 0 | 0 |
| 2-ம் ,, | 5-9 ஸ்கந்தங்கள் | ... | 6 | 0 | 0 |
| 3-ம் ,, | 10-வது ஸ்கந்தம் | ... | 6 | 0 | 0 |
| 4-ம் ,, | 11-12-வது ஸ்கந்தங்கள் | ... | 4 | 0 | 0 |

| | | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|
| 593. | ஆநந்தராமாயணம் | ... | 5 | 0 | 0 |
| 869. | மனோஹர ராமசரித்திரம் | ... | 3 | 12 | 0 |
| 782. | ராமசரிதமானஸம் என்னும் துளஸீ ராமாயணம், பாலகாண்டம் | ... | 3 | 4 | 0 |

## வால்மீகி ராமாயணம் தமிழ் வசனம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 15. | பால காண்டம் | ... | 1 | 12 | 0 |
| 17. | அயோத்யா காண்டம் | ... | 3 | 0 | 0 |
| 16. | ஆரண்ய காண்டம் | ... | 1 | 12 | 0 |
| 21. | கிஷ்கிந்தா காண்டம் | ... | 1 | 12 | 0 |
| 22. | ஸுந்தர காண்டம் | ... | 1 | 12 | 0 |
| 23. | யுத்த காண்டம் | ... | 3 | 8 | 0 |
| | ஆறுகாண்டமும் சேர்ந்து வாங்கினால் | ... | 10 | 0 | 0 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 432. | அத்யாத்ம ராமாயணம் | ... | 1 | 12 | 0 |
| 436. | அற்புத ராமாயணம் | ... | 0 | 10 | 0 |
| 18. | மஹாபாரதம் சாந்திபர்வம் | ... | 3 | 8 | 0 |
| 182. | விஷ்ணு புராணம் (முதல் பாகம்) | ... | 0 | 12 | 0 |

## இதர புஸ்தகங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 431. | பக்த மாலாவசனம் | ... | 3 | 0 | 0 |
| 834. | பக்தவிஜயம் | ... | 3 | 0 | 0 |
| 330. | மானிட மர்மசாஸ்திரம் | ... | 5 | 0 | 0 |
| 490. | சாரங்கதர ஸம்ஹிதை | ... | 3 | 0 | 0 |
| 832. | இந்துபாக சாஸ்திரம் (பெரியது) | ... | 2 | 0 | 0 |
| 404. | ஸங்கீத சந்திரிகை | ... | 5 | 0 | 0 |
| 329. | ஸங்கீத ரத்னாவளி | ... | 3 | 0 | 0 |
| 691. | ராமநாடகக் கீர்த்தனை | ... | 3 | 0 | 0 |
| 169. | மனோவசிய சாஸ்திரம் | ... | 3 | 0 | 0 |
| 350. | ஹிப்னாடிஸம் | ... | 5 | 0 | 0 |
| 870. | மனுதர்மசாஸ்திரம் | ... | 1 | 12 | 0 |
| 20. | ஸாமுத்ரிகா லக்ஷண சாஸ்திரம் | ... | 1 | 8 | 0 |
| 852. | ரத்தினப் பிரகாசம் | ... | 0 | 8 | 0 |

**காதல் வெற்றி.** விலை அணா 4.

இது ஹாஸ்யரஸம் பொருந்திய ஒரு உயர்ந்த தமிழ் நாவல். இதில் ஒரு பெண் தனது மனஸுக்குப் பிடிக்காத பையனைக் கல்யாணம் செய்துகொள்ள விரும்பாமல் தனது நெருங்கின பந்துவும் பால்ய நேசனுமாகிய ஒரு வாலிபனைக் கல்யாணம் செய்துகொண்ட கதை விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. இதில் புருஷனை எதிர்த்துப்பேசும் ஸ்திரீகளின் ஸ்வபாவமும், வைதீகர்களினுடைய வேடிக்கையான செய்கைகளும், மனைவிக்கு அடங்கி நடக்கும் புருஷர்களின் இயல்பும், விரிவாக எழுதப்பட்டிருக்கின்றன. சிறுவர் சிறுமியர் முதல் யாவரும் தாராளமாய் வாசிக்கக்கூடியது.

**தாதாபாய் நௌரோஜி.** விலை அணா 3.

இதில் காலஞ்சென்ற தாதாபாய் நௌரோஜியின் ஜீவ்ய சரித்ரமும், அவர் எழுதிய ஸ்வ சரித்ரமும், அவரது குணாதிசய விவரங்களும், அவர் வயோதிக காலத்தில் வாழ்நாளைக்கழித்த விவரங்களும் அடக்கியிருக்கின்றன.

**அன்புக்கும் அழிவோ?** விலை அணா 4.

இது சோக ரஸம் நிரம்பிய ஒரு இனிய தமிழ் நாவல். ரொம்ப அன்யோன்யமாயிருந்த புருஷன் பெண்சாதி ஆகிய இருவர்களை, புருஷனின் தாயார் மருந்து வைத்துப் பிரிப்பதும், நாட்டுப் பெண் தன் புருஷனுடைய ப்ரியத்தை இழந்து துக்கப் படுவதும், தெய்வ வசத்தால் தாயார் தன்பிள்ளையின் மருந்தை எடுத்து, பிள்ளையையும் நாட்டுப் பெண்ணையும் ஒன்று சேர்ந்து வாழவிடுவதும் இதில் தெளிவாகவும் ரஸமாகவும் எழுதப்பட்டிருக்கின்றன.

## ஹாஸ்ய மஞ்சரி.

இதில் அநேக வேடிக்கைக் கதைகளும் ஸம்பாஷணைகளும் அடங்கியிருக்கின்றன. பாடசாலைகளில் உபாத்யாயர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பிள்ளைகள் கூறும் சாதுர்யமான மறுமொழிகள், கோர்ட்டுகளில், ஸாக்ஷிகள், வக்கீல்கள், ஜட்ஜுகள் முதலியவர்களுக்குள் நடக்கும் வேடிக்கையான ஸம்பாஷணைகள், காதலர் காதலிகளுக்குள் நடக்கும் ஹாஸ்யமும் ச்ருங்காரமுமான ஸம்பாஷணைகள், சிலர் தங்களை ஸமர்த்தர்களென்று மதித்துப் பேசும் அசட்டுப் பேச்சுகள் முதலிய அநேக வேடிக்கைக் கதைகள் அடங்கியிருக்கின்றன. மொத்தம் 160 கதைகளும் ஸம்பாஷணைகளும் அடங்கியுள்ளன.

இதன் விலை அணா 6.

## பெற்ற மனம் பித்து.

இது க்ராமவாழ்க்கையின் இயல்பை விளக்கிக்காட்டும் ஒரு சிறு கதை.

பிள்ளையினிடம் வாஞ்சையுள்ள ஒரு க்ராமமுன்ஸிபின் பிள்ளை அவரோடு கோபித்து ஓடிவிட, அவர் துக்கப்படுவதும், நடைபோன ஆட்களின் விநோதப் பேச்சுகளும் நடவடிக்கைகளும், பாலர்களுடைய ப்ரதாபங்களும், இன்னும் க்ராம வாழ்க்கையைச் சேர்ந்த பல விஷயங்களும் இயற்கையில் உள்ளதுபோலவே எழுதப்பட்டிருப்பது வாசிக்க ரஸமாயிருக்கும்.

இதன் விலை அணா 2.

## ஸபேஸமிரா.

இது ஹிந்து புராதனக் கதைகளில் ஒன்று. தெய்வீக சக்தி வாய்ந்த குருவினிடம் ஒரு அரசன் விபரீத எண்ணங்கொண்டு அவரைக் கொலை செய்ய உத்தரவிடுவதும், அவரை மந்த்ரி காப்பாற்றி வைப்பதும், ராஜகுமாரன் மித்ரத்ரோகஞ் செய்து அதனால், பைத்யம் பிடித்து ஸபேஸமிரா என்று சொல்லிக்கொண்டு திரிய அவனை அந்த குருவே குணப்படுத்துவதும் இதில் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

இதன் விலை அணா 2.

**ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி.,**

**புஸ்தக வ்யாபாரிகள், ஹைகோர்ட்டுக்கு எதிரில்,**

**3, 4, கொண்டிசெட்டித் தெரு, மதராஸ்.**